**செ. கு. எண்**:175 **நாள்**:14.05.2012

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

அறிக்கை - 14.5.2012

சிவகங்கை மாவட்டம், பழையனேந்தல் கிராமம், புதுக்குடியிருப்பு விலக்கு அருகில், திருவாடானை – செலுகை சாலையில், 29.4.2012 அன்று ராமநாதபுரத்திலிருந்து திருச்சிராப்பள்ளி சென்று கொண்டிருந்த அரசு பேருந்து கார் ஒன்றின் மீது மோதியதில், காரில் பயணம் செய்த ராமநாதபுரம் மாவட்டம் அயனகுடி கிராமத்தைச் சேர்ந்த திரு. வேலு என்பவரின் மகன் திரு. வி.மலைக்கண்ணு, கம்பக்குடி கிராமத்தைச் சேர்ந்த திரு. நாகு என்பவரின் மகன் திரு. என்.ரவி, கத்தக்குடி கிராமத்தைச் சேர்ந்த திரு. ரவி என்பவரின் மகன் திரு. ஆர்.ஹரிஹரன் ஆகியோர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர் என்ற செய்தியையும்;

திருப்பூர் மாவட்டம், அவிநாசி வட்டம், பெருமாநல்லூர் கிராமம், பொடாரம்பாளையம் அருள்மிகு காணியாளன் திருக்கோவிலில் 9.5.2012 அன்று நடைபெற்ற திருவிழாவின் போது, கூட்ட நெரிசலினால் திருக்கோவில் திருமண்டபத்தின் நுழைவு வாயில் கதவு பொருத்தப்பட்ட பழைய மண் சுவர் இடிந்து விழுந்ததில் பெருமாநல்லூர் கிராமத்தைச் சேர்ந்த திரு. நாகமாணிக்கம் என்பவரின் மகள் சிறுமி செல்ல மணிமேகலை பலத்த காயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு, சிகிச்சை பலனின்றி 10.5.2012 அன்று உயிரிழந்தாள் என்ற செய்தியையும்;

விருதுநகர் மாவட்டம், சிவகாசி வட்டம், ஆணையூர் கிராமத்தில் இயங்கி வரும் பட்டாசு தொழிற்சாலையில் 10.5.2012 அன்று ஏற்பட்ட வெடி விபத்தில் லட்சுமியாபுரம் கிராமத்தைச் சேர்ந்த திரு. முத்து என்பவரின் மகன் திரு. கணேசன் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

திருச்சிராப்பள்ளி மாவட்டம், லால்குடி வட்டம், மேலரசூர் கிராமம், திருச்சி – சிதம்பரம் தேசிய நெடுஞ்சாலையில் நடந்து சென்று கொண்டிருந்த அரியலூர் மாவட்டம், இழந்தகுடம் கிராமத்தைச் சேர்ந்த திரு. குருசாமி என்பவரின் மகன் திரு. ராசு மீது 11.5.2012 அன்று அரசுப் பேருந்து மோதியதில் அவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்ற செய்தியையும் அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

இத்துயரச் சம்பவங்களில் அகால மரணமடைந்தவர்களின் குடும்பங்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், இவ்விபத்துகளில் காலமானவர்களின் குடும்பங்கள் ஒவ்வொன்றுக்கும் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து தலா ஒரு லட்சம் ரூபாய் வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழக முதலமைச்சர்

**வெளியீடு: –**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.**